அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 36/2013

எனது இல: EST-4/MINUT/04/3401
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2013.12.31

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரச சேவைகளில் விசேட பதவிகளுக்காக கீழ் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நோக்கத்திற்கான அடிமட்டக் கல்வித் தகைமைகள்**

6/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஒத்திசைவாக, விசேட பணிகளில் ஈடுபடுத்தப்படும் கனிஸ்ட தர அலுவலர் பதவிகளானவை அத்தகைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளவதில் சிக்கல்கள் தோன்றியுள்ளவிடத்து அத்தகைய பதவிகளுக்கு ஏற்புடையதாக தகைமைகளின் மட்டத்தினைக் குறைப்பதன் மூலம் உருவாக்கப்பட முடியும் என்று அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதற்கிணங்க, விசேட பணிகளில் (உதாரணம்:- யானைப்பாகன்) ஈடுபடுத்தும் நோக்கத்திற்காக கனிஸ்ட ஊழியர்களின் திணைக்களப் பதவிகளை உருவாக்கும் போது தற்போது அனுமதிக்கப்பட்ட அலுவலகப் பணியாளர் சேவையின் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை விட குறைந்த கல்வித் தகைமைகளுடன் பதவிகளுக்காக அனுமதி பெற்றுக்கொள்ளப்பட முடியும்.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு